DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : பாலகிருஷ்ணன் | Father/Husband Name : முனியாண்டி |
| Age : 45 | Village : பேர்நாயக்கன்பட்டி |
| Taluk : | Calling : ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13 Jul 2026 16:21
(Accused Present)

**முதல் விசாரணை** :–

1. நான் பேர்நாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர்கள்.

2. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் மாலை 06.00 மணியளவில் எனது வீட்டு முன்பாக வைத்து எனது ஆட்டோவின் கண்ணாடியை அடையாளம் தெரியாத நபர்கள் உடைத்துவிட்டார்கள். நடந்த சம்பவத்திற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் காவல்நிலையத்தில் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. நான் தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டேன். சமாதானமாக செல்ல எதிரிகள் என்னை மிரட்டவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை. எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன். (**சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது**)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை** –

4. கடந்த 02.06.2023ம் தேதி மாலை 06.00 மணியளவில் எனது வீட்டு அருகே வைத்து ஆஜர் எதிரிகள் எனது ஆட்டோவை வழிமறித்து தகாத வார்த்தைகளால் பேசி, என்னை தாக்கினார்களா என்றால் இல்லை. எதிரிகள் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்ற காரணத்தினால் அவர்களுடன் சமாதானமாகிவிட்டு அவர்களை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

13 Jul 2026 16:21

(Sd/-Thiru.S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy // P.P